பதிவஞ்சல் ஒப்புகை அட்டையுடன்

ந.க.எண்.11105/நிபி8/1/2021

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்
007132 இயக்குநர் அலுவலகம், சென்னை–6.
நாள்: 11.08.2021

பொருள்: பணிநியமனம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திரு.ப.பரிசுத்ததாஸ், (த/பெ.(அமரர்) திரு.டி.பக்கிரிசாமி, மருத்துவமனைப் பணியாளர், அரசு தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினம்) – இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை ஆணை வழங்கப்பட்டது – மூலச் சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடுகள் அனுப்புதல் – தொடர்பாக

20 DEC 2021

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 26.02.2021.
2. இவ்வியக்கக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.11105/நிபி8/1/2021, நாள் 24.06.2021.

*****

பார்வையில் காணும் கடிதத்தின் மீது நாகப்பட்டினம் மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் கவனம் ஈர்க்கப்படுகிறது. பார்வை இரண்டில் காணும் இவ்வியக்கக செயல்முறை ஆணையின்படி கருணையடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ப.பரிசுத்ததாஸ், தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக இணைந்த நாளான 04.01.2020 முற்பகல் முதல், வரன்முறை செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

செயல்முறை ஆணை வெளியிட்டதைத் தொடர்ந்து, திருப.பரிசுத்ததாஸ், இளநிலை உதவியாளரின் கீழ்க்கண்ட மூலச் சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடு மற்றும் இறந்த அரசு ஊழியர் திரு.டி.பக்கிரிசாமி பணிப்பதிவேடு (1 தொகுதி) திரும்ப அனுப்பப்படுகின்றன. அவற்றினை பெற்றுக்கொண்டமைக்கான **ஒப்புகையினை உடன் அனுப்புமாறு நாகப்பட்டினம் மாவட்ட இணை இயக்குநர் நலப்பணிகள்** கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

1) பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் எண்.0604196, பதிவெண்.624674 மார்ச் 2000.
2) மாற்றுச்சான்றிதழ் எண்.363, சேர்க்கை எண்.4464.
3) சாதிச்சான்றிதழ் எண்.2311355.
4) கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள திரு.ப.பரிசுத்ததாஸ், பணிப்பதிவேடு– 1 தொகுதி
5) இறந்த அரசு ஊழியர் திரு.டி.பக்கிரிசாமி பணிப்பதிவேடு – 1 தொகுதி

இணைப்பு – மேலே குறிப்பிட்டுள்ளவாறு

வ . மீனாட்சி சுந்தரம்,
கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்)

பெறுநர்
இணை இயக்குநர் நலப்பணிகள், நாகப்பட்டினம்.

நகல் :

திரு.ப.பரிசுத்ததாஸ், இளநிலை உதவியாளர் .
அரசு மருத்துவமனை, குத்தாலம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.

-- நாகப்பட்டினம் மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் மூலமாக

இருப்புக்கோப்பு –1 / உபரி –1

// உண்மைநகல் // ஆணைப்படி // அனுப்பப்படுகிறது //

கண்காணிப்பாளர்